## சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகள் அபிவிருத்தி வசதிகள் செயற்திட்டம் - 2014

சிறிய மற்றும் நடுத்தர முயற்சி அபிவிருத்தி வசதிகள் செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் (ஜீஓஎஸ்எல்) சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் (ஐடிஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2010 நவம்பர் 08 ஆம் திகதிய 4804 - எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பட்டோலை 2 இன் II பீ 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகள் அபிவிருத்தி வசதி செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் அபிவிருத்தி நிதித் திணைக்களம் செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் முன்னாள் நிதி, திட்டமிடல் அமைச்சும் தற்போதைய நிதி அமைச்சும் அமுலாக்கல் முகவராக உள்ளது. உலகளாவிய நிதிச் சிக்கலால் பாதிப்பிற்குள்ளான இலங்கையிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகளுக்கு குறுகிய கால நிதியளித்தலை உள்ளடக்கிய நிதியளிப்பிற்கான அணுகுதலை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும்.

இச் செயற்திட்டம் பின்வரும் பகுதிகளைக் கொண்டுள்ளது.

#### (அ) நிதியளித்தலும் ஆபத்தினைப் பகிர்தலும்

(i) சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு உப செயற்திட்ட கடன்களை வழங்கும் நோக்கத்திற்காக பங்குபற்றும் நிதி நிறுவனங்களுக்குக் (பீஎவ்ஐஎஸ்) கடனுதவி வழிகளை உருவாக்கி அத்தகைய சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகளுக்கு உற்பத்தித்திறன் மிக்க முதலீடுகளை வழங்குதல்.

(ii) பங்குபற்றும் நிதி நிறுவனங்களினால் ஆரம்பிக்கப்பட்டு பேணப்பட்டு வந்த சிறிய மற்றும் நடுத்தர முயற்சி உப செயற்திட்டக் கடன் தொகுதிகளுடன் தொடர்புடைய ஆபத்து பகிர்ந்து கொள்ளும் வசதிகளை ஏற்படுத்துவதனூடாக சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகளுக்கான நிதி விதிகளை அணுகுவதனையும் அதற்கான நியதிகளையும் விரிவாக்கல்.

#### (ஆ) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வங்கித் தொழிலின் கொள்கைகளையும் இயலளவையும் விரிவடையச் செய்தல்

(i) சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகள் மற்றும் அவ்வாறான முயற்சிகளுக்கு நிதியளித்தல் தொடர்பாகவும் அந்நிதியை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துவதற்குமென பங்குபற்றும் நிதி நிறுவனங்களது இயலளவைக் கட்டியெழுப்புதல்.

(ii) கட்டாய நிலைகள் மற்றும் அத்தகைய நோக்கத்திற்காக சிறிய மற்றும் நடுத்தர முயற்சி நிதியளிப்பிற்காக இயலுமான சூழலைப் பலப்படுத்தி இயலச் செய்தல் மற்றும் கண்டறியும் பகுப்பாய்வினை மேற்கொள்ளல்

(iii) நிர்வாக மற்றும் நிதி முகாமைத்துவம், கொள்வனவு, பணவளிப்பு என்பவற்றை உள்ளடக்கிய செயற்திட்ட முகாமைத்துவம், அமுலாக்கல், மேற்பார்வையிடல் மற்றும் மதிப்பாய்வு என்பவற்றிற்கு ஆதரவளிப்பதற்கு ஏற்பாடு செய்தல்.

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், சர்வதேச அபிவிருத்திச் சங்கம் ரூபா 7,575.7 மில்லியனிற்கு சமமான (ஐ.அ.டொலர் 57 மில்லியன்) எஸ்டீஆர் 57.4 மில்லியனை நிதியளிப்பதற்கு உடன்பட்டிருந்தது. செயற்திட்டமானது 2010 மே 01 இல் தனது நடவடிக்கைகளைத் தொடங்கியிருந்ததுடன் 2014 மார்ச் 31 அளவில் பூர்த்தியாக்க வேண்டுமென பட்டியலிடப்பட்டுள்ளது. பின்னர், செயற்திட்டக் காலம் 2015 செப்தெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

## 2. கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வுப் பரிசோதனைகளின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை வெளியிடுவது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினது மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறானவை. நிதிக்கூற்றுக்கள் பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்கள் அற்றன என்பதை நியாயபூர்வமாக உத்தரவாதம் செய்யும் வகையில் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கேற்ப கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள வெளிப்படுத்தல்களையும் தொகைகளையும் ஆதரிக்கவல்ல சான்றுகளைப் பரீட்சித்தல், நிதிசார் கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமையினால் கடைப்பிடித்த கணக்கீட்டுக் கோட்பாடுகள் மற்றும் முக்கிய மதிப்பீடுகள், நிதிக்கூற்றுக்களது ஒட்டு மொத்தச் சமர்ப்பணம் மீதான மீளாய்வு என்பவற்றைக் கணக்காய்வு உள்ளடக்கியது. எனது உயர் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் அமைய, கணக்காய்வு நடவடிக்கைகளுக்குத் தேவையான போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்கள் என்பன பெறப்பட்டன என்றும் அதற்கமைய, எனது அபிப்பிராயத்திற்கான போதியளவு அடிப்படை எனது கணக்காய்வின் மூலம் வழங்கப்பட்டது எனவும் நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்குத் தேவையெனக் கருதப்படும் முறைமைகளும் கட்டுப்பாடுகளும்,

கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புகள் கணக்கீட்டுப் பதிவேடுகள் போன்றவற்றையும் பரிசீலனை உள்ளடக்கியிருந்தது.

(அ) செயற்திட்ட முகாமை மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டினையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையினையும் உறுதிப்படுத்துவதற்கு ஏற்ப உள்ளகக் கட்டுப்பாட்டின் கண்ணோட்டத்தில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியவையாக இருந்தனவா என்பதும்

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்போரின் நிதியிலிருந்து செயற்திட்டம் மீதான செலவு, செயற்திட்டத்தின் நிதிசார் மற்றும் பௌதீகரீதியான முன்னேற்றம், செயற்திட்டத்தின் செயற்பாடுகளிலிருந்து உருவாகும் சொத்துக்களும் பொறுப்புகளும், கடன் முதலியவற்றின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் போன்வற்றினைக் காட்டுவதற்குத் தொடர்ச்சியான அடிப்படையில் போதியளவு கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டுள்ளதா என்பதும்

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் விதித்துரைக்கப்பட்டவாறு நடைபெற்றனவா என்பதும்

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதி, பொருட்கள், உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்

(உ) செயற்திட்ட அமுல்படுத்தலுக்காக கடைப்பிடித்த வகைப்படுத்தலின் பிரகாரம் செலவினம் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஊ) இலங்கை கணக்கீட்டு நியங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) கடன் உடன்படிக்கையில் விதித்துரைத்தவாறான நிதியளிப்புக் கட்டுப்பாட்டு உடன்பாடு காணப்பட்டனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது பரிசீலனையிலிருந்து தென்படுவதும் சிறந்த தகவல்களுக்கும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளை பேணியுள்ளதெனவும் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய, 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையினை விளக்குகின்றன என்பதும்

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்களானவை (எஸ்ஓஈஎஸ்) கடன் உடன்படிக்கையில் விதந்துரைத்த வேண்டுதல்களின் படி மீள் நிரப்பலிற்கான விண்ணப்பங்களை ஆதாரப்படுத்தவதற்கு நியாயமாக நம்பிக்கை வைக்கக்கூடியதாக இருந்தன என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்தஞ் செய்வதற்கு முகாமைத்துவம் திருப்பதிகரமான நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளன என்றும்

(உ) கடன் உடன்படிக்கையில் விதித்துரைக்கப்பட்ட நிதியளிப்புக் கட்டுப்பாடுகளுடன் உடன்பாடு ஏற்பட்டுள்ளன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதி மற்றும் செற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதியத்தின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான மறறும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான முக்கியமான புள்ளிவிபரங்கள் சில கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கடன் உடன்படிக்கை மூலம் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | 2014 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட தொகை | பயன்படுத்தப்பட்ட தொகை | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | 2014 திசெம்பர் 31 வரை | |
| | யூ.எஸ். டொலர் மிலலியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மிலலியன் | ரூபா. மிலலியன் | யூ.எஸ். டொலர் மிலலியன் | ரூபா. மிலலியன் |
| சர்வதேச அபிவிருத்திச் சங்கம் | 57 | 7,575.7 | 1,600 | 1,345.0 | 33.6 | 4,398.0 |
| இலங்கை அரசாங்கம் | - | - | 12 | 7.5 | 0.3 | 34.5 |
| | 57 | 7,575.7 | 1,612 | 1,352.5 | 33.9 | 4,432.5 |

செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக ரூபா 7,575.7 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 57 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில், ரூபா 4,432.5 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 33.9 மில்லியன் மாத்திரமே 2014 திசெம்பர் 31 வரை

பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆகவே, செயற்திட்டத்தின் மிகுதி 09 மாத காலத்தின் போது ஐ.அ.டொரல் 23.1 மில்லியன் அல்லது 41 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 3,143.20 மிகுதி ஒதுக்கீட்டின் பயன்பாடு கணக்காய்வில் நம்பிக்கை கொள்ள முடியவில்லை.

## 5.2. செயற்திட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் கடன் வழங்கலில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பங்களிப்பு நிதி நிறுவனங்களின் செயலாற்றல் கீழே தரப்பட்டுள்ளன.

| பங்குபற்றும் நிதி நிறுவனத்தின் பெயர் | அங்கீகரிக்கப்பட்ட கடன்கள் | | 2014 திசெம்பர் 31 வரை வழங்கப்பட்ட கடன்கள் | | அங்கீகரிக்கப்பட்ட கடனின் சதவீதமாக வழங்கப்பட்ட கடன்கள் |
|---|---|---|---|---|---|
| | கடன்கள் எண்ணிக்கை | அங்கீகரிக்கப்பட்ட தொகை | | | |
| | | ரூபா. மில்லியன் | | ரூபா. மில்லியன் | % |
| இலங்கை வங்கி | 135 | 999.9 | 95 | 579.0 | 58 |
| வர்த்தக வங்கி | 85 | 582.2 | 83 | 552.2 | 95 |
| டீஎப்சீசீ வங்கி | 27 | 368.0 | 26 | 363.7 | 99 |
| ஹற்றன் நஷனல் வங்கி | 55 | 783.3 | 44 | 559.6 | 71 |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 32 | 503.9 | 31 | 482.4 | 96 |
| மக்கள் வங்கி | 133 | 971.1 | 99 | 545.9 | 56 |
| பிரதேச அபிவிருத்தி வங்கி | 183 | 743.7 | 120 | 386.6 | 52 |
| சம்பத் வங்கி | 93 | 930.0 | 87 | 786.1 | 84 |
| | 743 | 5,882.1 | 585 | 4,255.5 | |

தனியார் துறையிலுள்ள அனுமதிக்கப்பட்ட வங்கிகள் பொது துறையில் அனுமதிக்கப்பட்ட வங்கிகளைத் தவிர அனுமதிக்கப்பட்ட கடன்களில் வழங்கப்பட்ட கடன்களின் உயர்ந்த சதவீதத்தைப் பேணியிருந்ததுடன் இது கடன் செயற்படுத்தல் சுழற்சியில் வினைத்திறனைக் காட்டியது.

எவ்வாறாயினும், தனியார் துறையில் 05 அனுமதிக்கப்பட்ட வங்கிகள் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளிற்கு மாத்திரம் 271 கடன்களை வழங்கியிருந்தது அதேநேரம் பொது துறையில் 03 அனுமதிக்கப்பட்ட வங்கிகள் 314 கடன்களை வழங்கியிருந்தது. ஆதலால், இலங்கை, மக்கள் வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கி வெற்றிகரமாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளில் ஈடுபடுத்திய தொழில்முயற்சியாளர்களை அணுகியிருந்தது.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பங்குபற்றும் நிதி நிறுவனங்களினதும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் முயற்சியாளர்களினதும் பதவியணியின் இயலளவு அபிவிருத்தி நோக்கங்களிற்காக நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளன.

| *பங்குபற்றும் நிதி நிறுவனத்தின் பெயர்* | *பங்குபற்றுநர்* | | | *மொத்தக் கிரயம்* | *ஒரு பங்கபற்றுநரின் கிரயம்* |
|---|---|---|---|---|---|
| | *சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள்* | *பங்குபற்றல் நிதி நிறுவனங்கள்* | *மொத்தம்* | *ரூபா.* | *ரூபா.* |
| இலங்கை வங்கி | 2,630 | 2,210 | 4,840 | 6,972,334 | 1,440 |
| வர்த்தக வங்கி | 1,282 | 307 | 1,589 | 1,055,864 | 664 |
| டீஎப்சீசீ வங்கி | 2,212 | 1,809 | 4,021 | 11,193,404 | 2,783 |
| ஹற்றன் நஷனல் வங்கி | 970 | 159 | 1,129 | 3,770,179 | 3,339 |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 1,835 | 1,377 | 3,212 | 12,335,251 | 3,840 |
| மக்கள் வங்கி | 1,175 | 578 | 1,753 | 11,482,715 | 6,550 |
| பிரதேச அபிவிருத்தி வங்கி | 145 | 742 | 887 | 5,645,227 | 6,364 |
| சம்பத் வங்கி | 529 | 261 | 790 | 3,555,186 | 4,500 |
| செயற்திட்ட கண்காணிப்பு பிரிவு | 809 | | 809 | 2,293,487 | 2,835 |
| | 11,587 | 7,443 | 18,990 | 58,303,647 | 3,070 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) செயற்திட்டமானது ஒரு பங்குபற்றுநரின் பயிற்சிக் கிரயத்தின் ஆகக் கூடிய மட்டத்தினை நிர்ணயித்திருக்காததுடன் இதன் விளைவாக, ஒரு

பங்குபற்றுநரின் பங்குபற்றல் நிதி நிறுவனங்களால் ஏற்பட்ட பயிற்சி கிரயம் குறிப்பிடத்தக்களவு மாற்றமடைந்து இருந்தது.

(ii) 11,587 தொழில்முயற்சியாளர்களிற்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்த போதிலும் 2014 திசெம்பர் 31 வரை சகல பங்குபற்றல் நிதி நிறுவனங்களால் 585 கடன்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

(iii) மேற்கொள்ளப்பட்ட சாத்தியவளக் கற்கைகளின் பிரகாரம், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களில் 3,414 ஆண்கள் 1,997 பெண்கள் என்போருக்காக வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்ட செயற்பாடுகள் பிரிவு செயற்திட்ட நடவடிக்கைகள் ஊடாக உருவாக்கப்பட்ட புதிய வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களில் போதிய தகவல்கள் பேணப்பட்டிருக்கவில்லை.

(இ) பங்குபற்றல் நிதி நிறுவனங்களுடன் செயற்திட்டத்தால் கைசாத்திடப்பட்ட உடன்படிக்கைகளின் ''ஜே'' ஆம் உட்பிரிவின் பிரகாரம், கடன்கள் மீதான வட்டி இலங்கை மத்திய வங்கியால் நிர்ணயிக்கப்பட்டவாறு நிலைய வைப்புக்கள் மீதான சராசரி வட்டி வீதம் அரையாண்டு ரீதியாக நிர்ணயிக்கப்பட வேண்டும். 8.69 சதவீதம் முதல் 15.93 சதவீதம் வரையான வீச்சில் நிலையான வைப்புக்கள் மீதான வித்தியாசமான வட்டி வீதங்கள் இலங்கை மத்திய வங்கியால் நிர்ணயிக்கப்பட்ட சராசரி வட்டி வீதத்தை பயன்படுத்துவதற்குப் பதிலாக கடன் மீதிகளில் பங்குபற்றல் நிதி நிறுவனங்களால் சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. 2014 யூலை மாதத்தில் செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட சமூக தாக்க மதிப்பீட்டு அளவை செயற்திட்டத்தின் பங்குபற்றல் நிதி நிறுவனங்களால் வித்தியாசமான வட்டி வீதங்கள் பிரயோகிக்கப்படுகின்றன எனவும் வெளிப்பட்டது.